KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 1, No. 03 (2016) 1

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts01032016.01

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

கவி கா.மு. ஷெரீபின் ‘கண்ணகியின் கனவு!’

Poet Kavi Ka.Mu. Sheriff's "Kannagi's Dream"

Dr. U. Alibava[1,*iD]

[1] Professor & Head, Department of Tamil Studies, Bharathidasan University, Tiruchirappalli - 620 024
***Corresponding author:** Dr. U. Alibava, alibavapkm@gmail.com
ORCID iD: Dr. U. Alibava https://orcid.org/0000-0002-2051-7002

ARTICLE INFO

Article history
Received: 10 July 2016
Revised: 12 July 2016
Accepted: 25 July 2016

Article ID
KIJTS-2026-0018

Peer review
Double-blind peer review

Keywords
Kavi Ka. Mu. Sheriff
Kannagi's Dream
Tamil Literature
Silappathikaram
Sangam Literature
Literary Essays
Social Thought
Tamil Cultural Heritage.

ABSTRACT

This research article examines Kannagi's Dream, a collection of literary essays written by Kalaimamani Poet Kavi Ka. Mu. Sheriff, first published in December 1982. The book explores the richness of classical Tamil literature by connecting its literary traditions with contemporary social, cultural, ethical, and intellectual perspectives. It comprises fourteen essays that discuss various dimensions of Tamil literary heritage, including the epic Silappathikaram, Sangam literature, Tamil political traditions, love and human relationships, Kamban's character portrayal, Thirukkural ethics, devotion, social justice, and common ownership. The study focuses on the thematic structure, literary perspectives, narrative techniques, conversational style, social consciousness, and linguistic features of the work. Through essays such as "Kannagi's Dream," the author presents Kannagi as a woman of mental strength, self-respect, and clarity of thought. His discussions on ancient Tamil diplomatic traditions, Sangam poetry, and the concept of common ownership highlight the intellectual and cultural contributions of Tamil society. Furthermore, the essays on devotion, humanitarian values, and moral principles reveal the author's emphasis on ethical living and social responsibility.

The distinctive feature of this work lies in its effective use of storytelling, dialogue, literary references, comparison, and humour to communicate complex literary ideas in an accessible manner. The study concludes that Kannagi's Dream serves as a significant literary bridge between classical Tamil traditions and contemporary social thought, encouraging readers to understand, appreciate, and preserve Tamil literary and cultural heritage.

How to cite this article: Dr. U. Alibava (2026). கவி கா.மு. ஷெரீபின் ‘கண்ணகியின் கனவு!’. *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *1*(03), 1–8. https://doi.org/10.63300/kijts01032016.01
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முனைவர் உ. அலிபாவா

பேராசிரியர் & தலைவர், தமிழியல்துறை,

பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 620 024.

Email : alibavapkm@gmail.com

https://orcid.org/0000-0002-2051-7002

தமிழ் இலக்கியம் என்பது காலந்தோறும் மனித வாழ்வின் அறம், உணர்வு, பண்பாடு, அரசியல், சமூக உறவு ஆகியவற்றைத் தன்னுள் பொதிந்து வளர்ந்துவரும் பெரும் அறிவுக் கருவூலமாகும். அத்தகைய இலக்கிய மரபைத் தற்கால வாசகனுக்கு உரையாடல், கதை, விளக்கம், ஒப்பீடு, சிந்தனை ஆகிய பல வடிவங்களில் எடுத்துரைக்கும் படைப்பாகக் கலைமாமணி கவிஞர் கவி கா.மு. ஷெரீபின் ‘கண்ணகியின் கனவு!’ என்னும் நூல் திகழ்கிறது. 1982ஆம் ஆண்டு டிசம்பரில் முதற்பதிப்பாக வெளிவந்த இந்நூல், இலக்கியக் கட்டுரைகளை மட்டும் கொண்ட தொகுப்பாக இல்லாமல், பழந்தமிழ் இலக்கியத்தின் கருத்துகளை நிகழ்கால வாழ்வோடு தொடர்புபடுத்தும் ஒரு படைப்பாகவும் உள்ளது.

இந்நூலில் சிலப்பதிகாரப் பின்னணியிலான ‘கண்ணகியின் கனவு’, ‘தமிழகமும் தூதுமுறையும்’, ‘பக்தி வேண்டும்’, ‘களவின்பம்’, ‘சங்ககால வருணனை’, ‘காதலும் - காவலும்’, ‘கம்பன் காட்டும் கதாபாத்திரம்’, ‘கதவம் திறமினோ’, ‘தமிழ் இலக்கியத்தில் பொதுவுடமை’, ‘கடவுளைக் காணும் வழி’, ‘வள்ளுவரும் மாணாக்கனும்’, ‘இது கொள்ளப்படுமோ?’, ‘ஒன்று சொன்னான்; ஒன்பது கேட்டாள்!’, ‘இலக்கியம் வளர்ப்போம்!’ ஆகிய பதிநான்கு தலைப்புகளில் இடம்பெற்றுள்ளன. இத்தலைப்புகள் வழியாகக் கவிஞர் இலக்கியத்தைப் படிப்பதோடு நிற்காமல், அதனுள் பொதிந்துள்ள அறவியல், உளவியல், அரசியல், சமூகநீதி, மொழிப்பற்று, பண்பாட்டு விழிப்புணர்வு ஆகிய கூறுகளையும் வெளிக்கொணர்கிறார்.

இக்கட்டுரை நூலின் அமைப்பு, கருத்துப் பரப்பு, இலக்கிய அணுகுமுறை, கதைசொல்லல் உத்தி, உரையாடல் முறை, சமூகப் பார்வை, மொழிநடை ஆகியவற்றை மையமாகக் கொண்டு இவ்ஆய்வுக் கட்டுரை அமைகிறது. நூலில் நேரடியாகக் காணப்படும் கருத்துகளையும் அவற்றிலிருந்து பெறப்படும் ஆய்வு முடிவுகளையும் தனித்தனியாக அணுகி, கவி. கா.மு. ஷெரிபின் இலக்கியப் பங்களிப்பை மதிப்பிடுகிறது.

கவி கா.மு. ஷெரீப் தமிழகம் அறிந்த கவிஞர், எழுத்தாளர், பேச்சாளர். நூலின் முன்னுரைப் பகுதியில் ஆசிரியர் தமது எழுத்துப் பயணத்தை நினைவுகூர்கிறார். தாம் முதலில் எழுதத் தொடங்கியது கவிதை என்றும், அவை இதழ்களில் வெளிவந்த படைப்புகளாக மட்டுமல்லாமல் நண்பர்களின் திருமண வாழ்த்துகள், தலைவர்களின் வரவேற்புரைகள் போன்ற நிகழ்வுகளோடும் தொடர்புடையதாக இருந்தன என்றும் அவர் குறிப்பிடுகிறார். பின்னர் எழுத்துப் பணி பல்வேறு நூல் வடிவங்களாக விரிந்ததையும் எடுத்துரைக்கிறார். இதன் மூலம் அவரது படைப்புலகம் கவிதையிலிருந்து உரைநடை, நாடகம், இலக்கிய விளக்கம் எனப் பல தளங்களை நோக்கி விரிந்ததை அறிய முடிகிறது.

‘கண்ணகியின் கனவு!’ நூலின் தனிச்சிறப்பு, பழந்தமிழ் இலக்கியத்தைப் பாடநூல் விளக்கமாக மட்டும் அணுகாமல், வாசகனுடன் நேரடியாக உரையாடும் வகையில் அமைந்திருப்பதாகும். சில கட்டுரைகள் வரலாற்று அல்லது இலக்கியச் செய்தியை முன்வைக்கின்றன; சில கட்டுரைகள் உரையாடல் வடிவில் கருத்தை வளர்க்கின்றன;

சில கட்டுரைகள் சிறுகதை போன்ற காட்சியமைப்பைப் பெற்று வாசகரின் கவனத்தை ஈர்க்கின்றன. இவ்வாறான பல்வகை அணுகுமுறை நூலுக்கு ஒரே மாதிரியான கட்டுரைத் தொகுப்பு என்ற எல்லையைத் தாண்டிய தன்மையை அளிக்கிறது.

நூலின் தலைப்பான 'கண்ணகியின் கனவு!' வாசகரை உடனடியாகச் சிலப்பதிகார உலகிற்குள் அழைத்துச் செல்கிறது. ஆனால் நூலின் உள்ளடக்கம் கண்ணகியை மட்டும் மையமாகக் கொண்டதல்ல. தமிழர் அரசியல் மரபு, காதல் ஒழுக்கம், பக்தியின் பொருள், சங்கப் பாடல்களின் காட்சியமைப்பு, கம்பனின் பாத்திரப் படைப்பு, பொதுவுடைமைச் சிந்தனை, கடவுள் பற்றிய தத்துவ நோக்கு, வள்ளுவரின் அறவியல், இலக்கியப் பரவல் ஆகியவை ஒன்றோடொன்று தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. இதனால் தலைப்பு ஒரு குறிப்பிட்ட கட்டுரையைச் சுட்டினாலும், நூலின் பரந்த இலக்கிய நோக்கத்திற்கான நுழைவாயிலாகவும் அமைகிறது.

இந்நூலின் பதிப்புரை நூலின் வரலாற்றுப் பின்னணியை அறிய உதவுகிறது. நூல் வெளிவந்த காலத்தையும் அதன் கருத்துகளையும் இணைத்துப் பார்க்கும்போது, தமிழின் மரபுச் செல்வத்தைப் பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற ஆசிரியரின் விருப்பம் தெளிவாகிறது. இந்நூல் மரபை நினைவுகூர்வதோடு, மரபை இன்றைய வாழ்வில் எவ்வாறு பொருள் கொள்ள வேண்டும் என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

சிலப்பதிகாரப் பார்வையும் கண்ணகியின் கனவும்

நூலின் முதல் கட்டுரையான 'கண்ணகியின் கனவு!' சிலப்பதிகாரத்தில் கண்ணகி கண்ட கனவுப் பகுதியை நாடகக் காட்சியாகக் காட்டுகிறது. சுமார் ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட காவிரிப்பூம்பட்டினத்தின் வணிகர் தெருவும் கோவலனின் இல்லமும் காட்சிக்குப் பின்னணியாக அமைகின்றன. கண்ணகி கவலையுடன் இருப்பதும், தேவந்தி அவளுடன் உரையாடுவதும் காட்டப்படுகிறது; இவற்றின் வழியாக நிகழ்வு நகர்கிறது. இங்கு கவிஞர் சிலப்பதிகாரக் காப்பியப் பாத்திரங்களைப் புதிய உரையாடல் சூழலில் நிறுத்தி, அவற்றின் மனநிலைகளை எடுத்துக்காட்டுகிறார்.

கண்ணகியின் மனக்குழப்பம், கணவனை எதிர்பார்த்திருக்கும் நிலை, கனவின் பொருள், தோழியின் ஆறுதல் ஆகியவை உரையாடலின் வழியாக வெளிப்படுகின்றன. கண்ணகியின் கற்பு என்பது வெறும் குடும்ப ஒழுக்கத்தின் குறியீடாக மட்டுமல்லாமல், மன உறுதி, சுயமரியாதை, உண்மையை உணர்ந்திருக்கும் ஆற்றல் ஆகியவற்றோடும் தொடர்புபடுத்தப்படுகிறது. தேவந்தி முன்வைக்கும் வழிபாட்டு அல்லது நம்பிக்கை சார்ந்த கருத்துகளுக்கு கண்ணகி அளிக்கும் பதில்கள், பாத்திரத்தின் சிந்தனைத் தெளிவை வெளிப்படுத்துகின்றன.

இந்தக் கட்டுரையில் ஆசிரியர் கண்ணகியைத் துயரத்தின் உருவமாக மட்டும் சித்தரிக்கவில்லை. அவள் கேள்வி கேட்கிறாள்; தோழியின் கருத்தை ஆராய்கிறாள்; தன் அனுபவத்தைத் தெளிவுபடுத்துகிறாள். இதனால் கண்ணகி பேசும் பெண்ணாகவும் சிந்திக்கும் பெண்ணாகவும் வாசகனின் முன் நிற்கிறாள். காப்பியப் பாத்திரத்தைப் புதிய உரையாடல் வடிவில் அணுகும் இந்த முயற்சி, இலக்கிய மறுவாசிப்பின் ஓர் எடுத்துக்காட்டாகக் கருதத்தக்கது.

‘இலக்கியம் வளர்ப்போம்!’ என்ற இறுதிப்பகுதி கட்டுரையிலும் சிலப்பதிகாரம் மீண்டும் மையம் பெறுகிறது. இந்திய அளவில் இராமாயணமும் மகாபாரதமும் பரவலாக அறியப்பட்டிருக்கும் நிலையில், தமிழர்களிடமே சிலப்பதிகாரம் முழுமையாக அறியப்படாத நிலை இருப்பதாக ஆசிரியர் கவலை தெரிவிக்கிறார். சிலப்பதிகாரத்தை விளம்பரமான வடிவத்திலும் விளம்பரப்படுத்தப்பட வேண்டிய வடிவத்திலும் வேறுபடுத்திப் பேசுவது குறிப்பிடத்தக்க உத்தியாகும். கண்ணகி - கோவலன் நிகழ்வை ஒரே கோணத்தில் சுருக்கிவிடாமல், காப்பியத்தின் முழுமையான இலக்கியச் செல்வத்தை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்பதே இங்கு வலியுறுத்தப்படும் கருத்து.

இதன் வழியாகக் கவி கா.மு. ஷெரீப் சிலப்பதிகாரத்தைப் பழங்காலப் பெருமையின் சின்னமாக மட்டும் கருதாமல், தமிழர் பண்பாட்டு அடையாளத்தின் உயிருள்ள பகுதியாகக் காண்கிறார். கண்ணகியின் பாத்திரமும் சிலப்பதிகாரத்தின் பரந்த உள்ளடக்கமும் புதிய தலைமுறையிடம் கொண்டு செல்லப்பட வேண்டியவை என்ற அவரது இலக்கியக் கடமை உணர்வு இவ்விரு கட்டுரைகளிலும் வெளிப்படுகிறது.

தமிழர் அரசியல் மரபும் தூதுமுறையும்

‘தமிழகமும் தூதுமுறையும்’ என்ற கட்டுரை, பழந்தமிழரின் அரசியல் அறிவையும் தூதரக மரபையும் எடுத்துரைக்கும் நோக்கத்துடன் அமைந்துள்ளது. நாகரிகத்தின் உச்சநிலையை அடைந்ததாகக் கருதப்படும் நவீன உலகிலும் ஒரு நாடு மற்றொரு நாட்டில் தூதுவரைத் தங்கவைத்து உறவைப் பேணுகிறது. இத்தகைய தூதுமுறை புதிய காலத்தின் கண்டுபிடிப்பு அல்ல; பழந்தமிழர் அரசியல் வாழ்விலும் அதற்கான அடிப்படை இருந்தது என்பதே கட்டுரையின் அடிநாதமாகத் தெரிகிறது.

கவிஞர் தமிழர் வரலாற்றுப் பெருமையை வெறும் புகழ்ச்சிச் சொல்லாக முன்வைக்காமல், இலக்கியச் சான்றுகளோடு தொடர்புபடுத்த முயல்கிறார். மூவேந்தர்களின் ஆட்சிச் செல்வாக்கு, வடநாட்டுடனான தொடர்புகள், போர் மற்றும் அரசியல் உறவுகள், செய்தியை உரிய இடத்துக்கு எடுத்துச் செல்லும் நடைமுறை போன்ற கூறுகள் வழியாகத் தூதின் அவசியம் விளக்கப்படுகிறது. பழந்தமிழ் இலக்கியத்தில் காணப்படும் அரசியல் நிகழ்வுகளை நவீனத் தூதரகக் கருத்தோடு ஒப்பிட்டு வாசிப்பது இக்கட்டுரையின் குறிப்பிடத்தக்க அணுகுமுறையாகும்.

இந்த அணுகுமுறையில் இரண்டு நிலைகள் உள்ளன. ஒன்று, தமிழர் வரலாற்றின் அரசியல் திறனை நினைவூட்டுதல். மற்றொன்று, நவீனமானது என்று கருதப்படும் பல

அமைப்புகளுக்கு முன்னோடியாகப் பழந்தமிழ்ச் சமூகத்தில் சில நடைமுறைகள் இருந்தன என்பதை வாசகனுக்குப் புரியவைத்தல். இதன் மூலம் ஆசிரியர் வரலாற்றை நிகழ்கால அறிவோடு உரையாடச் செய்கிறார்.

'சங்ககால வருணனை!' என்ற கட்டுரையும் தமிழர் வாழ்வியல் மற்றும் இலக்கிய மரபை வேறொரு கோணத்தில் அணுகுகிறது. வருணனை என்பது மிகைப்படுத்திக் கூறுதல் என்றாலும் அதில் உண்மை, ஒழுங்கு, அழகு, சிந்தனை ஆகியவை இடம்பெற வேண்டும் என்று ஆசிரியர் வலியுறுத்துகிறார். இது கவிதை அழகை மதிப்பிடுவதற்கான ஒரு முக்கியமான அளவுகோலாகும். சங்கப் புலவர்களின் வருணனையில் காட்சியின் அழகோடு கருத்தின் நம்பகத் தன்மையும் இணைந்திருப்பதை எடுத்துக்காட்டுவதன் மூலம், இலக்கிய அழகு என்பது அலங்காரச் சொற்களின் குவியல் மட்டுமல்ல என்பதை உணர்த்துகிறார்.

இவ்விரு கட்டுரைகளையும் இணைத்துப் பார்க்கும்போது, கவி கா.மு. ஷெரீபின் பார்வையில் இலக்கியம் வரலாற்றின் பதிவாகவும், வரலாற்றை விளக்கும் சான்றாகவும் அமைகிறது. தமிழர் அரசியல் மரபும் சங்க இலக்கிய அழகியலும் தனித்தனித் துறைகளாக அல்லாமல், ஒரு சமூகத்தின் அறிவு மற்றும் பண்பாட்டு வளர்ச்சியின் இரு முகங்களாகப் புரிந்துகொள்ளப்படுகின்றன.

காதல், களவு, காவல்: வாழ்வியல் உளவியல்

'களவின்பம்' மற்றும் 'காதலும் – காவலும்' ஆகிய கட்டுரைகள் காதல் வாழ்வின் நுண்ணிய உணர்வுகளையும் சமூகச் சூழலையும் இலக்கியத்தின் வழியாக ஆராய்கின்றன. சங்க இலக்கியத்தில் காதல் என்பது தனிமனித உணர்ச்சியாக மட்டும் அமையவில்லை; நிலம், காலம், இயற்கை, தோழி, ஊர், குடும்பம், சமூக ஒழுங்கு ஆகியவற்றோடு இணைந்த வாழ்வியல் அமைப்பாகவே வெளிப்படுகிறது. இதனை ஆசிரியர் கதையாக்கம் மற்றும் விளக்கத்தின் வழியாக வாசகருக்குப் புரிய வைக்கிறார்.

'களவின்பம்' எனும் கட்டுரையில் கடற்கரையை நோக்கிச் செல்லும் இளம் காதல் இணையரின் காட்சியுடன் உரை தொடங்குகிறது. கடற்கரையின் இயற்கைச் சூழல், இருவருக்கிடையிலான உரையாடல், உடல் - மனம் சார்ந்த மாற்றங்கள் ஆகியவை காட்சியமைப்பில் இணைகின்றன. சங்க அகப்பொருளில் 'களவு' என்பது திருமணத்திற்கு முந்தைய காதல் உறவின் இலக்கியப் பெயராகப் பயன்படுகிறது. அதனை வெறும் மறைவு அல்லது தவறான செயல் என்ற குறுகிய பொருளில் அல்லாமல், அக்கால வாழ்வியல் நெறிகளின் அடிப்படையில் புரிந்துகொள்ள வேண்டியதைக் கட்டுரை உணர்த்துகிறது.

'காதலும் - காவலும்' என்ற தலைப்பு காதல் உணர்வுக்கும் சமூகத் தடுப்புகளுக்கும் இடையிலான உறவைச் சுட்டுகிறது. ஒன்றைத் தாண்டி வரும்போது மற்றொன்று தடுத்து நிறுத்தும் பலவகை அரண்கள் பற்றிய உருவகத்துடன் கட்டுரை தொடங்குகிறது. காதலர்கள் சந்திக்க முடியாத சூழல், ஊரின் விழிப்புணர்வு, இரவின்

நீடிப்பு, காத்திருப்பின் மனநிலை ஆகியவை இலக்கியச் சித்திரங்களின் வழியாக விளக்கப்படுகின்றன. காதல் என்பது இரு உள்ளங்களின் தனிப்பட்ட உணர்வு என்றாலும், அது வாழும் சமூகத்தின் கண்காணிப்பிலிருந்து முற்றிலும் விடுபட்டதல்ல என்பதை இக்கட்டுரைகள் காட்டுகின்றன.

இந்தப் பகுதிகளில் கவிஞரின் கதைசொல்லும் திறன் வெளிப்படுகிறது. கருத்தை நேரடியாகச் சொல்லாமல், காட்சி, உரையாடல், உணர்ச்சி மாற்றம் ஆகியவற்றின் வழியாக வாசகனைச் சிந்திக்க வைக்கிறார். இதனால் இலக்கியக் கருத்து விளக்கமாக மட்டும் இல்லாமல் அனுபவமாகவும் மாறுகிறது.

இக்கட்டுரைகளின் ஆய்வுப் பெறுபேறு என்னவெனில், சங்க இலக்கியத்தின் காதல் உலகம் இன்றைய வாசகனுக்கும் புரியக்கூடிய மனித உணர்வுகளால் ஆனது என்பதாகும். காலம் மாறினாலும் காத்திருப்பு, ஏக்கம், சந்திப்பு, பிரிவு, சமூகத் தடைகள் போன்ற உணர்வுகள் மாறுவதில்லை. பழந்தமிழ் அகப்பொருளை நவீன வாசகனின் உணர்வுலகோடு இணைக்கும் பாலமாக இக்கட்டுரைகள் அமைகின்றன.

கம்பன், மாபலி, பாத்திரப் படைப்பு

‘கம்பன் காட்டும் கதாபாத்திரம்’ என்ற கட்டுரை கம்பராமாயணத்தில் இடம்பெறும் மாபலிச் சக்கரவர்த்தியை மையமாகக் கொண்டு நகர்கிறது. உலகை வென்ற இணையற்ற வீரனாகப் புகழப்படும் மாபலி, தன் ஈகைப் பண்பின் வழியாகவே பெருமை பெற்றவன் என ஆசிரியர் எடுத்துரைக்கிறார். வாமனனுக்குத் தானம் அளிக்கும் நிகழ்வை வெறும் புராணச் சம்பவமாக அல்லாமல், கொடுத்த வாக்கைக் காப்பதற்கான அறநிலையாகப் பார்க்கிறார்.

மாபலியின் பெருமை அவன் ஆட்சிச் செல்வாக்கிலோ வீரத்திலோ மட்டும் இல்லை; தன் நிலைப்பாட்டிலிருந்து விலகாமல் ஈகையை நிறைவேற்றும் மனவலிமையில்தான் இருக்கிறது. உயிர், உடைமை, அதிகாரம் ஆகியவற்றைக் காட்டிலும் அறச்சொல்லுக்கு மதிப்பளிக்கும் பாத்திரமாக மாபலி உருவாக்கப்படுகிறார். இதனை விளக்கும்போது ஆசிரியர் கம்பனின் பாடல்களையும் கருத்துகளையும் துணையாகக் கொள்கிறார். இறந்த பின்னரும் அறத்தால் வாழ்பவர்கள் மறைவதில்லை என்ற கருத்து இக்கட்டுரையின் அறவியல் மையமாகத் திகழ்கிறது.

கவி கா.மு. ஷெரீப் பாத்திரங்களை அணுகும் விதத்தில் ஒரு குறிப்பிடத்தக்க பண்பு காணப்படுகிறது. பாத்திரத்தின் செயலை மட்டும் விவரிக்காமல், அந்தச் செயலுக்குப் பின்னால் உள்ள மன உறுதி, அறநெறி, மனித மதிப்பு ஆகியவற்றை ஆராய்கிறார். இதனால் இலக்கியப் பாத்திரம் கதையின் ஓர் அங்கமாக மட்டுமல்லாமல், வாசகனுக்கான வாழ்வியல் முன்மாதிரியாகவும் மாறுகிறது.

‘கதவம் திறமினோ!’ என்ற கட்டுரையில் போருக்குச் சென்ற கணவனை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பெண்களின் மனநிலை நகைச்சுவை கலந்த காட்சியாக அமைக்கப்படுகிறது. கணவன் வெற்றி பெற்று வந்துவிட்டான் என்ற செய்தி

மற்றவர்களின் இல்லங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் நிலையில், தன் கணவனும் வருவானா என்ற எதிர்பார்ப்பு தலைவியின் மனத்தில் நீள்கிறது. "உன் கணவன் எப்போது வருவான்?" என்ற கேள்விக்கு, "உன் கணவன் வரும் அன்றே" என்ற குறும்பான பதில் போன்ற உரையாடல் வழியாகக் காத்திருப்பின் நகைச்சுவை வெளிப்படுகிறது.

இவ்விரு கட்டுரைகளும் வேறுபட்ட உணர்ச்சி நிலைகளை முன்வைத்தாலும், மனிதப் பண்புகளின் ஆழத்தை ஆராய்கின்றன. மாபலியின் ஈகை உயர்ந்த அறத்தின் எடுத்துக்காட்டாக அமைகிறது; போருக்குச் சென்ற கணவனை எதிர்பார்க்கும் பெண்ணின் நிலை அன்பு, பொறுமை, நகைச்சுவை ஆகியவற்றின் கலவையாக அமைகிறது. வீரமும் ஈகையும் காதலும் காத்திருப்பும் இலக்கியத்தில் மனித வாழ்க்கையின் பல்வேறு முகங்களாகப் பதிவாகின்றன என்பதை ஆசிரியர் உணர்த்துகிறார்.

சமூகநீதி, பொதுவுடைமை, அறவியல்

'தமிழ் இலக்கியத்தில் பொதுவுடமை!' என்ற கட்டுரை நூலின் சமூகச் சிந்தனை சார்ந்த முக்கியமான பகுதியாகும். பொதுவுடைமைத் தத்துவம் பற்றிய முழுமையான விளக்க நூல்கள் தமிழுக்கு ஒப்பீட்டளவில் புதியனவாக இருக்கலாம்; ஆனால் பொதுவுடைமை சார்ந்த கருத்துகள் தமிழின் பண்டைய இலக்கியங்களில் ஏற்கெனவே காணப்படுகின்றன என்பது ஆசிரியரின் வாதமாக அமைகிறது. இதன் மூலம் ஒரு நவீன அரசியல் கருத்தியலைத் தமிழின் மரபுச் சிந்தனைகளோடு தொடர்புபடுத்துகிறார்.

சமத்துவம், பகிர்வு, பிறர்நலம், செல்வத்தின் சமூகப் பயன் போன்ற கருத்துகள் சங்க இலக்கியங்களிலும் பிற அறநூல்களிலும் பல்வேறு வடிவங்களில் இடம்பெற்றுள்ளன. அவற்றைத் தேடி எடுத்துரைப்பதன் மூலம் பொதுவுடைமை என்பது வெளிநாட்டிலிருந்து வந்த புதிய சொல் அல்லது கோட்பாடு மட்டுமே என்ற எண்ணத்தை ஆசிரியர் மறுபரிசீலனைக்கு உட்படுத்துகிறார். இருப்பினும், பழந்தமிழ் இலக்கியத்தில் காணப்படும் பகிர்வு மற்றும் சமத்துவக் கருத்துகளையும் நவீன அரசியல் பொதுவுடைமைத் தத்துவத்தையும் ஒன்றாகவே கருதிவிடாமல், அவற்றின் வரலாற்று வேறுபாடுகளையும் கவனத்தில் கொள்ளுதல் ஆய்வாளரின் பொறுப்பாகும்.

'வள்ளுவரும் மாணாக்கனும்' என்ற கட்டுரை திருக்குறளின் அறவியல் கருத்துகளை உரையாடல் வடிவில் விளக்குகிறது. வள்ளுவருக்கும் மாணாக்கனுக்கும் இடையே நிகழும் உரையாடல், அறம் குறித்த ஒரு கேள்வியை எழுப்பி அதற்கான விளக்கத்தை படிப்படியாக விரிக்கிறது. ஈதல் மட்டுமே அறமா, அல்லது அறம் என்பது அதைவிடப் பரந்த வாழ்வியல் ஒழுக்கமா என்ற விவாதம் இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. மாணாக்கனின் சந்தேகத்தை வள்ளுவர் உடனடியாக மறுப்பதில்லை; அதன் வரம்பை விளக்கி அறத்தின் முழுமையான பரப்பை நோக்கி அழைத்துச் செல்கிறார்.

இந்த உரையாடல் கற்பித்தல் முறையிலும் சிறப்புடையது. கேள்வி எழுப்புதல், கருத்தை ஆராய்தல், தவறான புரிதலைச் சீர்செய்தல், விரிவான விளக்கத்தை வழங்குதல் ஆகிய படிநிலைகள் இதில் உள்ளன. இதனால் திருக்குறள் வெறும் மனப்பாட நூலாக இல்லாமல், சிந்திக்கவும் விவாதிக்கவும் வழிகாட்டும் வாழ்வியல் நூலாக வாசிக்கப்படுகிறது என்பதும் சுட்டப்படுகிறது.

இவ்விரு கட்டுரைகளிலும் சமூகநீதியும் அறவியலும் இணைந்துள்ளன. செல்வம் தனிமனித அனுபவத்திற்காக மட்டுமா, சமூக நலனுக்காகவும் பயன்பட வேண்டுமா என்ற கேள்வியும், மனிதன் எவ்வாறு அறவழியில் வாழ வேண்டும் என்ற வினாவும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. கவி கா.மு. ஷெரீபின் பார்வையில் இலக்கியம் சமூகப் பொறுப்புணர்வை வளர்க்கும் கருவியாக அமைகிறது.

பக்தி, இறைநம்பிக்கை, மனிதநேயம்

‘பக்தி வேண்டும்’ மற்றும் ‘கடவுளைக் காணும் வழி!’ ஆகிய கட்டுரைகள் சமய உணர்வையும் மனிதநேயத்தையும் சிந்தனைக்குரிய பொருள்களாக முன்வைக்கின்றன. ‘பக்தி வேண்டும்’ என்ற தலைப்பு பக்தியை ஏற்பதற்கோ, மறுப்பதற்காக அல்ல; பக்தியின் உண்மையான பொருளை ஆராய்வதற்காக அமைந்துள்ளது. பகுத்தறிவு, நாட்டுப்பற்று, சமூகப் பொறுப்பு, மனிதனின் ஒழுக்கம் ஆகியவற்றோடு பக்தி எவ்வாறு தொடர்புபடுகிறது என்பதைக் கவிஞர் இக்கட்டுரையில் விவாதிக்கிறார்.

பக்தி என்பது சடங்கு அல்லது வெளிப்புற அடையாளங்களால் மட்டும் அளவிடப்பட முடியாது. மனிதனின் உள்ளத்தில் உருவாகும் நம்பிக்கை, பணிவு, அன்பு, பிறருக்கு நன்மை செய்யும் மனப்பான்மை ஆகியவற்றோடு அது இணைந்திருக்க வேண்டும் என்ற கருத்து இப்பகுதியில் வெளிப்படுகிறது. சிலப்பதிகாரம் உள்ளிட்ட இலக்கியச் சான்றுகளைக் கொண்டு பெண்களின் நாட்டுப்பற்று, அரசின் மீதான பற்றுணர்வு போன்றவை எடுத்துரைக்கப் படுவதும் குறிப்பிடத்தக்கது. பக்தி, தனிமனித ஆன்மிக அனுபவமாக மட்டும் சுருங்காமல், சமூக வாழ்வின் பொறுப்புணர்வோடும் தொடர்புடையதாகிறது.

‘கடவுளைக் காணும் வழி!’ என்ற கட்டுரை “கடவுளைக் கண்டதுண்டா?”, “காட்ட முடியுமா?” என்ற பொதுவான கேள்விகளிலிருந்து தொடங்குகிறது. இக்கேள்விகளுக்கு ஆசிரியர் வெறும் வாதமோ மறுப்போ அளிப்பதில்லை. அன்பு, உள்ளத் தூய்மை, மன உருக்கம் போன்ற அகநிலைகளை முன்வைத்து இறை அனுபவத்தை விளக்குகிறார். அன்புக் கண்ணாடி வழியாகப் பார்க்காமல் ஆண்டவனை உணர முடியாது என்ற கருத்து, இறைநம்பிக்கையை உள்ளார்ந்த மனிதப் பண்புகளோடு இணைக்கிறது.

இங்கு ஆசிரியரின் மொழிநடை வாசகனை நேரடியாகச் சந்திக்கிறது. கேள்வி எழுப்பும் தொடக்கம் வாசகரின் அனுபவத்தைத் தூண்டுகிறது; பின்னர் தரப்படும் விளக்கம் சிந்தனையை விரிவாக்குகிறது. இதனால் கட்டுரை ஒருதலைப்பட்சமான உபதேசமாக மாறாமல் உரையாடலின் தன்மையைப் பெறுகிறது.

இவ்விரு கட்டுரைகளையும் இணைத்துப் பார்க்கும்போது, கவி கா.மு. ஷெரீப் பக்தியையும் பகுத்தறிவையும் ஒன்றுக்கொன்று எதிரான இரு முனைகளாக எளிமைப் படுத்தவில்லை என்பது புரிகிறது. மனிதனின் உள்ளார்ந்த நன்மை, அன்பு, ஒழுக்கம் ஆகியவற்றின் வழியாகவே ஆன்மிக உணர்வு பொருள் பெறுகிறது என்ற மனிதநேய நோக்கு இங்கு முக்கியத்துவம் பெறுகிறது.

இலக்கியச் சான்று, உரைநடை, நகைச்சுவை உத்தி

‘இது கொள்ளப்படுமோ?’ என்ற கட்டுரை இலக்கியப் பாடல்களின் பாடவேறுபாடு, இடைச்செருகல், உரைமாற்றம் போன்ற பதிப்பியல் சிக்கல்களை வாசகனின் கவனத்திற்கு கொண்டு வருகிறது. செய்யுள்களில் இடைச்செருகல்கள் புகுந்துள்ளன என்று கூறுவோர் பலர் இருப்பதையும், திருக்குறளின் சில பாடல்கள் குறித்த கருத்து வேறுபாடுகளையும் ஆசிரியர் எடுத்துரைக்கிறார். குறிப்பாக ஒரு குறள் வரியை நண்பருடன் விவாதிக்கும் நிகழ்வை உரையாடல் வடிவில் அமைத்துள்ளார்.

ஒரு செய்யுளின் சொற்களை எவ்வாறு பிரிக்கிறோம், எந்த வடிவில் வாசிக்கிறோம், அதன் பொருளை எவ்வாறு எடுத்துக்கொள்கிறோம் என்பவை பொருள் புரிதலை மாற்றக்கூடும். இதனால் பழைய நூல்களைப் படிக்கும் போது மூலப்பாடம், ஏட்டுப் பிரதிகள், உரையாசிரியர் கருத்து, பதிப்பாசிரியர் முடிவு ஆகியவற்றைக் கவனமாக ஆராய வேண்டும் என்ற ஆய்வியல் உணர்வு உருவாகிறது. இக்கட்டுரை முழுமையான பதிப்பியல் ஆய்வாக விரிவடையா விட்டாலும், பாடநிர்ணயத்தின் அவசியத்தைப் பொதுவாசகனுக்கு எடுத்துச் சொல்வதில் பயனுள்ளதாக அமைகிறது.

‘ஒன்று சொன்னான்; ஒன்பது கேட்டாள்!’ என்ற கட்டுரை உரையாடல், நகைச்சுவை, சமூக விமர்சனம் ஆகியவற்றை இணைக்கிறது. ஊர்த் தலைவனாகவும் செல்வாக்கு மிக்கவனாகவும் தன்னை எண்ணிக்கொள்ளும் ஆண் பாத்திரத்தின் நடத்தை, அவனது மனைவியின் எதிர்வினை ஆகியவை காட்சிப்படுத்தப்படுகின்றன. ஆணாதிக்க மனப்பான்மை, வீட்டிற்கு வெளியே அலைந்து திரியும் ஆண் நடத்தைகள், குடும்ப உறவின் எதிர்பார்ப்புகள் ஆகியவை நகைச்சுவையின் வழியாக விமர்சிக்கப்படுகின்றன.

இந்தக் கட்டுரையில் நகைச்சுவை வெறும் பொழுதுபோக்காகப் பயன்படவில்லை. ஒருவரின் பேச்சுக்கும் செயலுக்கும் இடையிலான முரண்பாட்டை வெளிப்படுத்தும் சமூகக் கருவியாக அது செயல்படுகிறது. ஒரு கேள்விக்குப் பதிலாக ஒன்பது கேள்விகள் எழும் சூழல், உரையாடலின் நகைச்சுவைத் தன்மையை மட்டுமல்லாமல், குடும்ப உறவுகளில் உள்ள அதிகாரச் சமநிலையின்மையையும் வெளிப்படுத்துகிறது.

இவ்விரு கட்டுரைகளும் ஆசிரியரின் உரைநடைத் திறனின் வேறுபட்ட முகங்களை வெளிப்படுத்துகின்றன. ஒன்று நூற்பாடம் மற்றும் இலக்கியச் சான்று குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது; மற்றொன்று அன்றாட வாழ்வின் முரண்பாடுகளை நகைச்சுவையால் சுட்டுகிறது. அறிவார்ந்த விவாதத்தையும் பொதுவாசகனுக்குப்

புரியும் எளிய உரையாட லையும் இணைக்கும் திறன் இந்நூலின் முக்கியமான பலமாகும்.

மொழிநடை, உத்திகள், இலக்கியப் பங்களிப்பு

‘கண்ணகியின் கனவு!’ நூலின் மொழிநடையை ஆராயும்போது எளிமை, உரையாடல் தன்மை, காட்சியமைப்பு, இலக்கிய மேற்கோள், கேள்வி எழுப்பும் முறை ஆகிய கூறுகள் தென்படுகின்றன. ஆசிரியர் கருத்தை நேரடியாக விளக்கும் இடங்களும் உள்ளன; பாத்திரங்களின் வாயிலாகக் கருத்தை வெளிப்படுத்தும் இடங்களும் உள்ளன. இதனால் வாசகன் கட்டுரையைப் படிப்பதோடு மட்டுமல்லாமல், நிகழ்வுக்குள் நுழைந்து கேட்பவராகவும் சிந்திப்பவராகவும் மாறுகிறான்.

முதலாவது உத்தி - நாடக உரையாடல். ‘கண்ணகியின் கனவு’, ‘வள்ளுவரும் மாணாக்கனும்’ போன்ற பகுதிகளில் பாத்திரங்கள் பேசுவதன் வழியாக கருத்து வளர்கிறது. இரண்டாவது உத்தி - கதைசொல்லல். ‘களவின்பம்’, ‘கதவம் திறமினோ!’ போன்ற கட்டுரைகள் காட்சியிலிருந்து தொடங்கி வாசகரின் ஆர்வத்தைத் தூண்டுகின்றன. மூன்றாவது உத்தி - ஒப்பீடு. பழந்தமிழர் அரசியல் மரபையும் நவீனத் தூதுமுறையையும் ஒப்பிடுதல், பழைய இலக்கியக் கருத்துகளையும் இன்றைய சமூகச் சிந்தனைகளையும் தொடர்புபடுத்துதல் ஆகியவை இதற்கு எடுத்துக்காட்டுகள். நான்காவது உத்தி - இலக்கிய மேற்கோள். சங்கப் பாடல்கள், சிலப்பதிகாரம், திருக்குறள், கம்பராமாயணம் போன்ற நூல்களின் வழியாக ஆசிரியர் தமது கருத்துகளுக்கு இலக்கிய ஆதாரத்தை உருவாக்குகிறார்.

நூலின் பலம் அதன் பரந்த கருத்துப் பரப்பாகும். ஒரே நூலில் காப்பியப் பாத்திரம், அகப்பொருள், அரசியல் மரபு, அறவியல், பக்தி, பொதுவுடைமை, உரைநடைப் பரவல் ஆகியவை இடம்பெறுகின்றன. இவை தனித்தனித் தலைப்புகளாக இருந்தாலும், தமிழிலக்கியத்தின் சமூகப் பயன்பாடு என்ற பொதுவான நோக்கில் ஒன்றிணைகின்றன. இலக்கியம் வாழ்க்கையிலிருந்து பிரிந்த கலை அல்ல; வாழ்வை அறியவும் திருத்தவும் வழிகாட்டும் அறிவு என்ற பார்வை நூல் முழுவதும் அடிநாதமாக உள்ளது.

ஆய்வுக் கண்ணோட்டத்தில் சில வரம்புகளையும் சுட்டலாம். சில இடங்களில் வரலாற்று அல்லது இலக்கியக் கருத்துகள் விரிவான மேற்கோள் விவரங்களுடன் அமைந்தால் ஆய்வுத் துல்லியம் மேலும் வலுப்பெறும். பண்டைய கருத்துகளையும் நவீன அரசியல் கோட்பாடுகளையும் ஒப்பிடும்போது காலச்சூழல் வேறுபாடுகளைத் தெளிவுபடுத்துவது அவசியம். நூலின் சில உரையாடல் வடிவங்கள் வாசிப்புக்கு எளிமையளித்தாலும், அவற்றின் இலக்கிய ஆதாரங்களைத் தனியே வகைப்படுத்தினால் ஆய்வாளர்களுக்கு கூடுதல் பயன் கிடைக்கும். இவை நூலின் முக்கியத்துவத்தைக் குறைக்கும் குறைகள் அல்ல; எதிர்கால ஆய்வுகளுக்கான விரிவாக்க வாய்ப்புகளாகக் கொள்ளப்பட வேண்டும்.

மொத்தத்தில், கவி காமு ஷெரிப் மரபிலக்கியத்தைப் பொதுமக்களிடம் கொண்டு செல்லும் பாலமாகத் தமது உரைநடையைப் பயன்படுத்துகிறார். வாசிப்பைச் சிந்தனையாகவும் சிந்தனையை வாழ்வியல் விழிப்புணர்வாகவும் மாற்றும் முயற்சியே இந்நூலின் தனித்துவமான இலக்கியப் பங்களிப்பாகும்.

கவி கா.மு. ஷெரீபின் ‘கண்ணகியின் கனவு!’ என்னும் இலக்கியக் கட்டுரைத் தொகுப்பு, தமிழின் பழமையான இலக்கியச் செல்வத்தைப் புதிய வாசிப்பு முறையில் அணுகும் முயற்சியாக மதிப்பிடத்தக்கது. சிலப்பதிகாரத்தின் கண்ணகி, சங்க இலக்கியத்தின் காதல் உலகம், தமிழர் அரசியல் மரபு, கம்பன் படைத்த மாபலி, திருக்குறளின் அறவியல், பக்தியின் உள்ளார்ந்த பொருள், பொதுவுடைமைச் சிந்தனை, இலக்கியப் பாடவேறுபாடு, குடும்ப உறவுகளின் நகைச்சுவை ஆகியவை நூலில் பல்வேறு கோணங்களில் ஆராயப்படுகின்றன.

இந்நூலின் அடிப்படைச் சிறப்பு, இலக்கியத்தைப் பழங்காலத்தில் முடங்கிய ஒன்றாகக் கருதாமல், நிகழ்கால மனிதனின் சிந்தனைக்கும் சமூக வாழ்வுக்கும் பயன்படும் அறிவாகக் காண்பதாகும். கண்ணகியின் மன உறுதி பெண்ணின் சுயநிலையை நினைவூட்டுகிறது; தூதுமுறை குறித்த கட்டுரை தமிழர் அரசியல் அறிவை வெளிப்படுத்துகிறது; காதல் சார்ந்த கட்டுரைகள் மனித உணர்வுகளின் நிலைத்தன்மையை எடுத்துக்காட்டுகின்றன; மாபலி பாத்திரம் ஈகை மற்றும் அறத்தின் பெருமையை உணர்த்துகிறது; பொதுவுடைமை பற்றிய கட்டுரை சமூகப் பகிர்வின் மரபை நினைவூட்டுகிறது; வள்ளுவருடனான உரையாடல் அறத்தின் விரிவை விளக்குகிறது; ‘இலக்கியம் வளர்ப்போம்!’ என்ற கட்டுரை தமிழின் காப்பியச் செல்வத்தை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டிய பண்பாட்டுப் பொறுப்பை வலியுறுத்துகிறது.

கவி கா.மு. ஷெரீபின் உரைநடை வாசகனை அச்சுறுத்தாத எளிமையையும் சிந்திக்கத் தூண்டும் வினாக்களையும் இணைக்கிறது. கதை, உரையாடல், மேற்கோள், ஒப்பீடு, நகைச்சுவை ஆகிய உத்திகள் வழியாக இலக்கியக் கருத்துகள் பொதுவாசகனுக்கு அணுக்கமாக்கப்படுகின்றன. இதனால் இந்நூல் இலக்கியத்தைப் படிப்பதற்கான வழிகாட்டியாகவும், தமிழர் பண்பாட்டை மறுபரிசீலனை செய்யும் சிந்தனைத் தூண்டலாகவும் அமைகிறது.

இன்றைய தலைமுறைக்கு இந்நூல் தரும் முக்கியமான செய்தி ஒன்றே: மரபைப் போற்றுவது என்பது அதை வெறுமனே புகழ்வதல்ல; அதன் உள்ளார்ந்த கருத்துகளைப் புரிந்து, காலத்திற்கேற்பப் பொருள் கொண்டு, அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதாகும். சிலப்பதிகாரம் படிக்கப்பட வேண்டும்; சங்க இலக்கியம் உணரப்பட வேண்டும்; திருக்குறள் வாழ்வில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்; தமிழின் கலை, பண்பாடு, கருத்துச் செல்வம் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இத்தகைய பண்பாட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நூலாக ‘கண்ணகியின் கனவு!’ விளங்குகிறது. எனவே, கவி கா.மு. ஷெரீபின் இந்நூல் தமிழ் இலக்கிய மரபையும் சமகாலச் சமூகச் சிந்தனையையும் இணைக்கும் ஓர் உரைநடை

ஆவணமாகக் கருதப்பட வேண்டும். இலக்கியம் என்பது கடந்த காலத்தின் நினைவுச் சின்னம் மட்டுமல்ல; நிகழ்காலத்தைப் புரிந்துகொள்ளவும் எதிர்காலத்தை உருவாக்கவும் உதவும் வாழ்வியல் ஒளி என்பதை இந்நூல் உணர்த்துகிறது.

துணைநூல்

References

கவி கா.மு. ஷெரீப், ‘கண்ணகியின் கனவு! - இலக்கியக் கட்டுரைகள்’, அபிராமி நிலையம், 307 லிங்கிச் செட்டித் தெரு, சென்னை - 600 001, முதற்பதிப்பு : டிசம்பர் 1982.